**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.30/2024**

Witness examined in accordance with High court of Madras video conferencing Rules 2020.

**05.03.2026. அ.சா.12 K.ஜெயப்பிரகாஷ் த/பெ. கந்தசாமி**

Accused present

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கில் புகார் கொடுத்த சிவக்குமார் இறந்துபோன மணிகண்டனின் தகப்பனார் என்றால் சரிதான். அவருடைய சொந்தஊர் பெரியேரி துரிஞ்சிக்குப்பம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பூங்கொல்லைமேடு என்றால் சரிதான். பூங்கொல்லைமேடு கிராமத்திற்கும் துரிஞ்சிக்குப்பத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பூங்கொல்லைமேடு பாலகிருஷ்ணன் வீட்டிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தயார் செய்த வரைபடத்தில் சம்பவ இடம் கமலக்கண்ணனின் வீட்டுமனை என்று காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. பாலகிருஷ்ணனின் வீட்டிற்கு வெளியேதான் சம்பவ இடம் என்று குறியீடு செய்துள்ளேன். சாட்சி பசுபதியை நான் விசாரணை செய்யவில்லை என்றால் விசாரித்துள்ளேன். நான் சாட்சி பட்டியலில் சேர்த்துள்ள கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் துரிஞ்சிக்குப்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரியும் இறந்த நபரும் பூங்கொல்லைமேட்டில் உள்ள யாருடைய வீட்டின் விஷேஷத்திற்கு சென்றார்கள் என்பதை உறுதிசெய்ய நான் சாட்சிகளை விசாரித்தேனா என்றால் இல்லை. இறந்த மணிகண்டன் எதிரிக்கு கொடுத்த கடனான ரூ.5,000/– ல் ரூ.3000/– திரும்ப செலுத்திவிட்டு ரூ. 2000/– பாக்கி வைத்ததுதான் சம்பவத்திற்கான மூலக்காரணம் என்றால் சரிதான். அந்த கடன் சம்மந்தப்பட்ட எந்த ஆவணமும் நான் கைப்பற்றவில்லை. மேற்படி கடனைப்பற்றி யார் சொல்லியுள்ளார்கள் என்றால் சாட்சிகள் ராஜாபாபு, லட்சுமி, ஆனந்தன், மணிகண்டன் ஆகியோர் சொல்லியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் மேற்படி கடனைப்பற்றி கேள்விப்பட்டதாகதான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். இறந்துபோன மணிகண்டனை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் அதைப்பற்றி விசாரணையில் தெரியவரவில்லை. 108 ஆம்புலன்சில் வந்துள்ளார் என்று தெரியவந்தது. மணிகண்டன் முதலில் போளூர் மருத்துவமனையிலும், பின்னர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையிலும் பின்னர் சென்னை ராஜிவ்காந்தி அரசு

மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் போளூர் அரசு மருத்துவனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகலை பார்த்தேன். அந்த விபத்து பதிவேட்டில் நோயாளின் பெயர் Unknown என்று மருத்துவரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மருத்துவமனையில் அவர் 04.12.2022 மாலை 07.00 மணிக்கு சிகிச்சைக்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அதில் அந்த பெயர் தெரியாத நோயாளியின் வயது சுமாராக 35 வயது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முகவரி பெரியகரம் பால்பண்ணை அருகில் என்றும் அதற்கு கீழே அந்த இடத்தில் இருந்து 108 ஆம்புலன்சில் அவர் கொண்டு வரப்பட்டதாக ( 108 Pickup Spot) என்று எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. அவரை 108 ஆம்புலன்ஸ் அழைத்து வந்ததாக உள்ளது என்றால் சரிதான். பெரியகரம் பால்பண்ணை இறந்த நபரின் வீடா அல்லது எந்த இடம் என்று நான் விசாரிக்கவில்லை. அந்த விபத்து பதிவேட்டில் அருகே இருந்தவர்கள் எவ்வாறு தாக்கப்பட்டதாக கூறினார்கள் என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மற்ற விவரங்கள் எதுவும் மருத்துவருக்கு தெரியவில்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த மணிகண்டனின் வயது 26 என்றால் சரிதான். 108 ஆம்புலன்சில் கொண்டுவரப்பட்டது மணிகண்டன்தான் என்று எவ்வாறு தெரியவந்தது என்றால் புகார்தாரர் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்து தெரியவந்தது. புகாரில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லப்படும் பாரத் மற்றும் இளங்கோ ஆகியோரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியும் மணிகண்டனும் இருசக்கர வாகனத்தில் சென்றதை பார்த்ததாக சொல்லப்படும் பிரியா என்ற நபரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மணிகண்டன் 08.12.2022 அன்றுதான் சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் இறந்துள்ளார் என்றால் சரிதான். 08.12.2022 அன்று பிரேத விசாரணை செய்தபோது இருந்த சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்துள்ளேன். அவர்கள் அனைவரும் துரிஞ்சிக்குப்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் அனைவரும் துரிஞ்சிக்குப்பத்தை சேர்ந்தவர்கள் அல்ல. இந்த வழக்கில் என்னால் கைப்பற்றப்பட்ட ரத்தம் தோய்ந்தமண், விறகுகட்டை ஆகியவற்றில் ரத்தம் இருந்ததாக குருதிவடிநீரியல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் 3 அடி நீளம் உள்ள விறகுகட்டை சம்பவத்திற்கு சம்மந்தப்படாதது என்று சொன்னால் சரியல்ல. இறந்த மணிகண்டனும் அவரது தந்தையும் சென்னையில் வேலை செய்ததாக சொன்னார்கள். புகாரில் தட்டச்சு செய்யப்பட்டு தேதி குறிப்பிடப்படாமல் உள்ளது என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில்

மணிகண்டன் சிகிச்சை பெற்றது சம்மந்தமாக யாரையும் விசாரிக்கவில்லை ஆவணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மணிகண்டனுக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் அவர் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். இறந்த மணிகண்டனை யாரோ வேறு எங்கே அடித்துவிட்டதை வைத்து எதிரிதான் அடித்தார் என்று தவறாக முடிவு செய்து ஒரு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள சம்பவ இடத்திற்கும் விபத்து பதிவேடு நகலில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவ இடத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் எதிரிக்கும் மணிகண்டனுக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக ஒருமூலக்காரணம் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

| | | |
|---|---|---|
| V. Varalakshmi | | M. Vanginathan |
| Bench clerk Gr.1 | K. Jayaprakash | Data entry operator |
| **Court site coordinator** | **Deponent** | **Remote site coordinator** |

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.